# கூட்டாட்சித் தேர்தலுக்கான வழிகாட்டுதல்



C'est notre vote

வாக்களித்தல் மற்றும் நடைமுறையில் உள்ள சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த அதிகாரப்பூர்வமான தகவல்களை அறிந்து கொள்ள elections.ca என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

**1-800-463-6868 / elections.ca / TTY 1-800-361-8935**

Elections Canada
EC 90332-TAM (02/2021)

# உங்களுடைய சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றிற்கே நாங்கள் முன்னுரிமை அளிக்கிறோம்


**வாக்களிக்கும் நிலையத்தில் வாக்குச்சாவடி பணியாளர்கள் முகக்கவசங்களை அணிந்து கொண்டிருப்பார்கள். அங்கு பின்வருபவையும் இருக்கும்:**



கை கிருமி நீக்க நிலையங்கள்




உடல்ரீதியான இடைவெளிக்கான தெளிவான குறியீடுகள்



ஒரு பிளெக்சி கிளாஸ் தடுப்புக்குப் பின்னால் ஒரு மேஜைக்கு ஒரே ஒரு வாக்குச்சாவடி பணியாளர் மட்டும்


**நீங்கள் வாக்களிக்கச் செல்லும் போது பின்வருவனவற்றை மறக்காதீர்கள்:**



ஒரு முகக்கவசத்தை அணிந்து கொள்ள வேண்டும்



உங்களுடைய வாக்குச்சீட்டில் குறியிட நாங்கள் உங்களுக்கு ஒரு முறை பயன்படுத்தக்கூடிய ஒரு பென்சிலை வழங்குவோம் அல்லது நீங்கள் உங்களுடைய சொந்தப் பேனாவையோ அல்லது பென்சிலையோ கொண்டு வரலாம்





வாக்காளர்கள் மற்றும் வாக்குச்சாவடி பணியாளர்கள் ஆகியோரிடமிருந்து குறைந்த பட்சம் இரண்டு மீட்டர்கள் தள்ளி நின்று உடல்ரீதியான இடைவெளியைக் கடைபிடிக்கவும்

**உங்களுக்கு கோவிட்-19 இருப்பதாகப் பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டாலோ அல்லது உங்களுக்கு கோவிட்-19 அறிகுறிகள் இருந்தாலோ அல்லது வைரஸ் தொற்று ஏற்பட்ட யாரேனும் ஒருவருடன் நீங்கள் தொடர்பில் இருந்தாலோ, தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பிக்கும் பொருட்டு elections.ca என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.**

---

**elections.ca** என்ற இணையதளத்தில் இந்த சிறிய வெளியீடு பல்வேறு மொழிகளில் கிடைக்கப்பெறுகிறது.
பிரெய்லி, பெரிய அச்சு மற்றும் டெய்சி போன்ற பிற வடிவங்களுக்கு
**1-800-463-6868** or **1-800-361-8935 (TTY)** என்ற எண்ணில் எங்களை அழைக்கவும்

# வாக்காளர் தகவல்கள் அடங்கிய அட்டையைப் பெறுவதற்கு நீங்கள் பதிவு செய்துள்ளீர்கள் என்பதை உறுதி செய்து கொள்ளவும்




**நீங்கள் பதிவு செய்துகொண்டால்,** தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு வாக்காளர் தகவல்கள் அடங்கிய அட்டையை நீங்கள் தபாலில் பெறுவீர்கள். உங்களால் எங்கு மற்றும் எப்போது வாக்களிக்க முடியும் என அதில் கூறப்பட்டிருக்கும். வாக்களிக்கும் செயல்முறையை எளிதாக்கும் பொருட்டு இந்த அட்டையை ஏற்றுக்கொள்ளப்படும் ஓர் அடையாள அட்டையுடன் சேர்த்து கொண்டு வரவும்.

**இந்த அட்டையை நீங்கள் பெறாவிட்டாலோ அல்லது அதில் உள்ள தகவல்கள் தவறாக இருந்தாலோ** நீங்கள் பதிவு செய்யப்படாமல் போகக்கூடும் அல்லது உங்களுடைய வாக்காளர் தகவல்கள் நாளது தேதிவரை புதுப்பிக்கப்படாமல் இருக்கக்கூடும். பதிவு செய்யவோ அல்லது உங்களுடைய முகவரியைப் புதுப்பிக்கவோ **elections.ca** என்ற இணையதளத்தைப் பார்க்கவும் அல்லது உதவிக்கு **1-800-463-6868** அல்லது **1-800-361-8935 (TTY)** என்ற எண்ணை அழைக்கவும். நீங்கள் வாக்களிக்கச் செல்லும் போது கூட பதிவு செய்து கொள்ளலாம் அல்லது உங்களுடைய வாக்காளர் தகவல்களைப் புதுப்பித்துக்கொள்ளலாம்.

---

**கூட்டாட்சித் தேர்தலில் பதிவு செய்து கொள்ளவும், வாக்களிக்கவும் நீங்கள்:**

- ஒரு கனடிய குடிமகனாக இருக்க வேண்டும்
- தேர்தல் நாளன்று உங்களுக்கு குறைந்தபட்சம் 18 வயது ஆகியிருக்க வேண்டும்
- உங்களுடைய அடையாளத்தையும், முகவரியையும் நிரூபிக்க வேண்டும்

# வாக்களிப்பதற்கான வழிகள்

**தேர்தல் காலத்தின் போது கிட்டத்தட்ட எந்த நேரத்திலும் உங்களால் வாக்களிக்க முடியும்.**
உங்களுக்கு மிகவும் வசதியான வாக்களிக்கும் முறையை உங்கள் விருப்பப்படி தேர்வு செய்யவும்.

**1 தேர்தல் நாளன்று**

உங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வாக்களிக்கும் நிலையம் 12 மணி நேரம் திறந்திருக்கும் (நேர மண்டலத்தின் படி மணி நேரங்கள் வேறுபடக்கூடும்).

உங்களால் எங்கு மற்றும் எப்போது வாக்களிக்க முடியும் என்பதற்கு உங்களுடைய **வாக்காளர் தகவல்கள் அடங்கிய அட்டையைப்** பார்க்கவும்.

**2 முன்னரே வாக்களிக்க இயலும் நாட்களில்**

தேர்தல் நாளுக்கு முன்புள்ள வாரத்தில் உங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வாக்களிக்கும் நிலையம் வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் திங்கள் ஆகிய கிழமைகளில் முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 9 மணி வரை திறந்திருக்கும்.

**3 தபால் மூலம்**

தேர்தல் நாளுக்கு முன்பாக செவ்வாய் கிழமை பிற்பகல் 6.00 மணிக்குள் விண்ணப்பிக்கவும். ஒரு சிறப்பு வாக்குச்சீட்டு செயல்முறையைப் பயன்படுத்தி நீங்கள் வாக்களிப்பீர்கள் உங்களுடைய குறியிடப்பட்ட வாக்குச்சீட்டு **தேர்தல் நடைபெறும் நாளுக்குள்** எங்களுக்கு கிடைப்பதை உறுதி செய்து கொள்ளவும், அல்லது அதை எண்ண இயலாது. இறுதித்தேதிகள் குறித்த மேலதிகத் தகவல்களுக்கும், தபால் மூலம் வாக்களிப்பது உங்களுக்கு ஒரு சரியான விருப்பத் தேர்வாக இருக்குமா என்று பார்ப்பதற்கும் **elections.ca** என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

**4 கனடாவெங்கிலும் உள்ள ஏதனும் ஒரு கனடா தேர்தல்கள் அலுவலகத்தில்**


தேர்தல் நாளுக்கு முன்பாக செவ்வாய்க் கிழமை பிற்பகல் 6:00 மணிக்குள் கனடாவெங்கிலும் உள்ள ஏதேனும் ஒரு கனடா தேர்தல்கள் அலுவலகத்திற்குச் செல்லவும். நீங்கள் ஒரு சிறப்பு வாக்குச்சீட்டு செயல்முறையைப் பயன்படுத்தி வாக்களிப்பீர்கள். தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு உங்களுக்கு அருகில் உள்ள கனடா தேர்தல்கள் அலுவலகத்தைக் கண்டறிய **elections.ca** என்ற இணையதளத்தைப் பார்க்கவும் அல்லது எங்களை அழைக்கவும்.

தபால் மூலமாகவோ அல்லது ஏதேனும் ஒரு கனடா தேர்தல்கள் அலுவலகத்திலோ வாக்களிக்க நீங்கள் விண்ணப்பித்தவுடன், அதுவே இந்தத் தேர்தலில் நீங்கள் வாக்களிப்பதற்கான **ஒரே ஒரு** வழியாக இருக்கும்.

# வாக்களிக்க உங்களுடைய அடையாள அட்டையைத் தயாராக வைத்திருக்கவும்

**உங்களுடைய அடையாளத்தையும், முகவரியையும் நிரூபிக்க உங்களுக்கு மூன்று விருப்பத் தேர்வுகள் உள்ளன.**
வாக்களிக்க நீங்கள் ஒரு கனடிய குடிமகனாக இருக்க வேண்டும் மற்றும் தேர்தல் நாளன்று உங்களுக்கு குறைந்தபட்சமாக 18 வயது ஆகியிருக்க வேண்டும்.

**விருப்பத்தேர்வு 1**




**இந்த அடையாள அட்டைகளில் ஒன்றைக் காண்பிக்கவும்**

- உங்களுடைய ஓட்டுநர் உரிமம்
- கனடா அரசாங்கத்தால் (ஃபெடரல், மாகாணம்/பிராந்தியம் அல்லது உள்ளூர்) வழங்கப்பட்ட உங்களுடைய புகைப்படம், பெயர் மற்றும் தற்போதைய முகவரி ஆகியவை அடங்கிய எந்த ஒரு பிற அட்டை

**அல்லது**

**விருப்பத்தேர்வு 2**



+



**இரண்டு அடையாள அட்டைகளைக் காண்பிக்கவும்**

இரண்டிலும் உங்களுடைய பெயர் இருக்க வேண்டும் மற்றும் குறைந்தபட்சமாக ஒன்றில் உங்களுடைய தற்போதைய முகவரி இருக்க வேண்டும்.

**உதாரணங்கள்:**

- வாக்காளர் தகவல்கள் அடங்கிய அட்டை மற்றும் வங்கி அறிக்கை
- பயன்பாட்டு ரசீது மற்றும் மாணவர் அடையாள அட்டை

**இவையேதும் உங்களிடம் இல்லையா? பிரச்சினை எதுவும் இல்லை!**


ஏற்றுக்கொள்ளப்படும் பிற அடையாள அட்டைகளும் இங்கு உள்ளன.
இதன் முழுப்பட்டியலையும் **elections.ca** என்ற இணையதளத்தில் பார்க்கவும்.

**அல்லது**

**விருப்பத்தேர்வு 3**



+



**உங்களிடம் அடையாள அட்டை இல்லையெனில்**

உங்களுடைய அடையாளத்தையும், முகவரியையும் நீங்கள் எழுத்துப்பூர்வமாக அளித்து உங்களுடைய வாக்களிக்கும் நிலையத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உங்களுக்குத் தெரிந்த யாரேனும் ஒருவரால் அதைச் சான்று செய்தால் கூட நீங்கள் வாக்களிக்க முடியும்.

சான்றளிப்பவரால் அவருடைய அடையாளத்தையும், முகவரியையும் நிரூபிக்க இயல வேண்டும். ஒரு நபர் ஒரே ஒரு நபருக்கு மட்டுமே சான்றளிக்க முடியும் (நீண்ட கால பராமரிப்பு நிலையங்கள் தவிர).

# வாக்களிக்க உதவும் கருவிகள் மற்றும் சேவைகள்

**அனைத்து வாக்காளர்களுக்கும் தேர்தல் நாளுக்கும், முன்கூட்டியே வாக்களிக்கும் நாட்களுக்கும் உரிய வாக்களிக்கும் நிலையங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.** தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு, உங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வாக்களிக்கும் நிலையம் நீங்கள் அணுகக்கூடிய வகையில் உள்ளதா என்பதை உறுதிசெய்து கொள்ளவும். அது எந்த அளவுக்கு அணுகக்கூடிய வகையில் உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ள:

- உங்களுடைய வாக்காளர் தகவல்கள் அடங்கிய அட்டையைப் பார்க்கவும்
- **elections.ca** என்ற இணையதளத்திற்குச் சென்று வாக்காளர் தகவல் சேவை என்ற கட்டத்தில் உங்களுடைய அஞ்சல் குறியீட்டை உள்ளீடு செய்யவும் அல்லது
- **1-800-463-6868** அல்லது **1-800-361-8935 (TTY)** என்ற எண்ணில் எங்களை அழைக்கவும்

உங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வாக்களிக்கும் நிலையத்தை அணுகுவதில் உங்களுக்கு பிரச்சினைகள் இருந்தால் **1-800-463-6868** அல்லது **1-800-361-8935 (TTY)** என்ற எண்ணில் எங்களை அழைக்கவும்.

மொழி மற்றும் சைகை மொழியின் விளக்கம் உள்ளிட்ட வாக்களிப்பதற்கான உதவியை முன்கூட்டியே கோர தேர்தல் நாளுக்கு முன்பு செவ்வாய் கிழமை பிற்பகல் 6:00 மணிக்குள் உங்கள் பகுதியில் உள்ள கனடா தேர்தல்கள் அலுவலகத்தை அழைக்கவும்.

---

### தேர்தல் நாளன்று வாக்களிப்பதற்கு உதவும் கருவிகள் மற்றும் சேவைகள்

**வேட்பாளர்களின் பெயர்கள் பெரிய எழுத்தில் அச்சிட்டப்பட்ட பெரிய வாக்குச்சீட்டு**

**பெரிய எழுத்தில் மற்றும் பிரெய்லியில் அச்சிடப்பட்ட வேட்பாளர் பட்டியல்கள்**

**தொட்டு உணரக்கூடிய மற்றும் பிரெய்லியில் அச்சிடப்பட்ட வாக்களிக்கும் படிவம்**

**பெரிதாக்கி காட்டும் கண்ணாடிகள் (4x)**

**மொழி மற்றும் சைகை மொழிக்கான விளக்கம்** (மற்றும் **முன்கூட்டியே கோரப்படும் பட்சத்தில்** பிற உதவியும் அளிக்கப்படுகிறது)

**உங்கள் வாக்குச்சீட்டில் குறியீடு செய்வதில் உதவிடுதல்**
(உங்களுக்குத் தெரிந்த யாரேனும் ஒருவரைக் கூட்டி வரவும் அல்லது ஒரு தேர்தல் பணியாளரைக் கேட்கவும்)

**பெரிய பிடிமானம் கொண்ட பென்சில்**
(குறைந்த எண்ணிக்கையில்)
நீங்கள் உங்களுடைய சொந்தப் பேனாவையோ அல்லது பென்சிலையோ கொண்டு வரலாம்

**கையொப்பத்திற்கான வழிகாட்டுதல்**

**குறிப்பு:** பிரெய்லியில் அச்சிடப்பட்ட வேட்பாளர்களின் பட்டியல்கள் தேர்தல் நாளன்று மட்டுமே கிடைக்கப்pபெறுகின்றன. பெரிய எழுத்தில் அச்சிடப்பட்ட பட்டியல்கள் முன்கூட்டியே வாக்களிக்க இயலும் நாட்களிலும், தேர்தல் நாளன்றும் கிடைக்கப்பெறுகின்றன